1972 சனவரி 25]

ஆராய்ந்து சில யோசனைகளை இந்தக் குழுவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்தக் குழுவினர் பரிசிலித்து வருகிறார்கள். அதற்காக அவருக்கு ரெம்யூனரேஷன் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்கிற விவரம் குறிப்பில் இல்லை.

பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள்

*** 39 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 2,206 பேர்.

(இ) இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

*** 40 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

படிப்பிற்கிடையே தொழிற்பயிற்சி போதிக்கும் முறை

*** 41 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்ஜினியரிங் கல்லூரிகளிலும் "சாண்ட்விச் படிப்பு முறை" (படிப்புக்கு இடையே தொழிற் பயிற்சி போதிக்கும் முறை) ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1972-73-ல் ஒன்று அல்லது இரண்டு பொறியியல் கல்லூரிகளில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்படலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த சாண்ட்விச் படிப்பு முறையின்படி எத்தனை மணி நேரம் படிப்பு, எத்தனை மணி நேரம் தொழில் பயிற்சி அளிக்கிற திட்டம் இருக்கிறது ? தொழிற்